# பொன்னர், சங்கர் பாத்திரப் பண்புநலன்கள்

ஆ.ராஜலெட்சுமி,
ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவி,
தமிழியல் துறை,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
அட்டுவம்பட்டி,
கொடைக்கானல் – 624101,
***rajimtwu2000@gmail.com***

முனைவர். தி. மே. சா. சந்திரமணி ஜெபராணி,
தமிழ்த்துறைத் தலைவர்,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
அட்டுவம்பட்டி,
கொடைக்கானல் – 624101,
***jebarani.kkl@gmail.com***

## ஆய்வுச் சுருக்கம்

பொன்னர் – சங்கர் பற்றிய வரலாறு கருணாநிதி அவர்கள் படைப்பதற்கு முன்பாகவே வெவ்வேறு தலைப்பில் இருவர் படைத்துள்ளர்என்பதைப் பற்றியும் கலைஞர்.மு.கருணாநிதியின் பொன்னர் – சங்கர் புதினத்தில் இடம்பெற்றுள்ள மாந்தர்களின் பண்புகள் மக்களின் வாழ்விற்கு ஏற்ற நல்வழியினை காட்டுவதாக அமைந்துள்ளது என்ற தகவல் முன்னுரையாக அமைந்துள்ளது. பொன்னர், சங்கர் இருவர் யாருடைய குழந்தைகள் என்ற உண்மையை அறிதல் மற்றும் அவர்களின் பூர்வீக வரலாற்றினை அறிந்து கொண்டு தாதா, தந்தை இருவரும் இழந்த உரிமையை போரிட்டு வெற்றியடைந்து உரிமையை கைப்பற்றி மக்களை சுதந்திரமடையச் செய்து வீரமரணம் அடைந்துவிடுவர் என்ற செய்தி

கதைச்சுருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.ஒருமனிதன் பொருமை, வீரம், சாதுர்யம் ஆகியவற்றைசூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தினால் மக்களிடையே அழியா புகழினை அடையலாம் என்ற கருத்து பொன்னரின் பண்பு நலன் என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.ஆசானுக்கு அஞ்சி, ஆசானை வணங்கி, கட்டுப்பட்டு கல்வி கற்று வாழ்பவன் எத்திசையும் போற்றப்படுபவனாக ஆவான் என்ற கருத்து சங்கரின் பண்பு நலன் என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது. பொன்னர், சங்கர் இருவரின் பண்பின் மூலம் வெளிப்படும் கருத்தினை அனைவரும் கடைப்பிடித்தால் வாழ்கை சிறப்படையும் என்ற கருத்து முடிவுரையாக அமைந்துள்ளது.

**முன்னுரை :**

கலைஞர். மு.கருணநிதி அவர்கள் மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு பல வரலாற்று புதினங்களைப் படைத்துள்ளார். ஆட்சியாளராக இருந்திருந்தாலும் வரலாற்றினை ஆராய்வதற்கும், அவற்றினை எழுதிவெளியிடுவதற்கும் தன் வாழ்வின் பெரும்பகுதியை ஒதுக்கியுள்ளார். கலைஞரின் முதல் புதினம் புதையல். பின் ஒரே ரத்தம், தென்பாண்டிசிங்கம், ஒரு மரம் பூத்தப்பூ என பல புதினங்களை படைத்துள்ளார். மேலும் இருவர், பொன்னர் சங்கர் பற்றிய வரலாற்றினை படைத்துள்ளனர்.திரு. அ. பழனிச்சாமி **(வரகுண்ணாப் பெருங்குடிக் கூட்டம் பொன்னர் சங்கர் வரலாறு)** அவர்களும்,கவிஞர் சக்திவேல் **(அண்ணன்மார் சுவாமி கதை)** அவர்களும்தொகுத்துள்ளனர்.இவர்களுடைய படைப்பிற்குப் பின்னரே கலைஞர்.மு.கருணாநிதி அவர்கள் **பொன்னர் - சங்கர்** புதினத்தை படைத்துள்ளார்.இப்புதினத்தில் இடம்பெற்றுள்ள மாந்தர்கள் அனைவரும் ஒவ்வொரு பண்பு நலன்களை கொண்டுள்ளனர். அவர்களுடைய பண்பு நலன்கள் மக்களை நல்வழிப்படுத்துவதாக அமைகின்றன.பொன்னர்,சங்கர் புதினத்தில் இடம்பெற்றுள்ள சில முக்கிய கதாப்பாத்திரங்களின் பண்புநலன்கள் வாயிலாக வாழ்க்கைக்குரிய கருத்தினை கற்றுக்கொள்ளமுடிகிறது.இவ்வரலாற்றுப் புதினத்தில் இருபத்தி ஏழு கதைமாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். இருபத்தி ஏழு கதைமாந்தர்களுள் பொன்னர், சங்கர் ஆகிய இருவரின் பண்புநலன்கள் மட்டுமே ஆய்வுக் கட்டுரைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**கதைச் சுருக்கம்;**

கலைஞர் . மு. கருணாநிதி அவர்களின் பொன்னர், சங்கர் புதினத்தில் முக்கிய மாந்தர்களான பொன்னர், சங்கர் ஆகியோரின் பூர்வீகநாடு வாழவந்தி என்னும் நாடு. வாழவந்தி திருச்சிமாவட்டத்தில் அமைந்துள்ளது.பொன்னர், சங்கரின் தாத்தா கோளாத்தாக்கவுண்டர் காலம் முதல் பொன்னர், சங்கர் ஆகிய அண்ணன்மார்கள் ஆட்சி காலம் வரை திருச்சி,கரூர்,நாமக்கல் ஆகிய மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி

செய்துள்ளனர். இவ்வம்சத்தின் கடைசி ஆட்சியாளர்கள் பொன்னர், சங்கர்ஆகியோராவர். பொன்னர், சங்கர் இருவரின் தாத்தா கோளாத்தாக்கவுண்டரின் பூர்வீக நாடு வாளவந்தி என்னும் சீமை. கோளாத்தாக்கவுண்டரின் சகோதரர்களின் சூழ்ச்சியால் வாழவந்தியை சகோதரர்களிடமே ஒப்படைத்துவிட்டு நாட்டைவிட்டே வெளியேறிவிட்டார். அதன்பிறகு சோழ சிற்றரசரிடம் எழுபது வள்ளம் பூமியை பரிசாக பெற்றார். எழுபது வள்ளம் பூமியை உடைய நாடு கோநாடு என்று பெயர் கொண்டது. கோநாடு இன்று வளநாடு என்று அழைக்கப்படுகிறது. கோளாத்தக்கவுண்டரும் அவரது மனைவியும் வளநாட்டில் வேளாண்மை செய்துசெழிப்பினையும், புகழினையும் அடைந்து நெல்லியங்கோடன் என்ற குழந்தையையும் பெற்றெடுத்தார்.குழந்தை பிறந்த ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் இறந்துவிடுகின்றனர். இவர்களுக்குப் பிறகு நெல்லியங்கோடனை அடிமைப்படுத்தி துன்புறுத்தி வளநாட்டை விட்டே விரட்டியடித்துவிட்டு வளநாட்டையும் கோளாத்தாக்கவுண்டரின் சகோதரர் செல்லாத்தாக்கவுண்டரே அபகரித்துக்கொண்டார்.நாட்டைவிட்டு வெளியேறிய நெல்லியங்கோடன் ஆதிச்செட்டிப்பாளையம் என்னும் ஊரில் செட்டியார் வீட்டில் ஆடு மாடு மேய்த்துக் கொண்டு பண்ணை வேலை செய்து கொண்டிருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு தாமரைநாச்சி என்பவளை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகு சோழ சிற்றரசரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு உதவியாக சில நிலங்களையும், உழவு மாடுகளையும், உழவுக் கருவிகளையும் பெற்றுக் கொண்டனர்.அந்நிலங்களில் வேளாண்மை செய்து கடுமையாக உழைத்து மக்களிடையே செல்வாக்கினை பெற்று பல குன்றுகளையுடைய பகுதிகளை ஆட்சிசெய்துவந்தார். நெல்லியங்கோடன், தாமரைநாச்சி ஆகியோருக்கு பிறந்தவர்களே பொன்னர், சங்கர் ஆகிய இருவர். இவ்விருவரும் தனது பூர்விகப் பிரச்சனைகளையும், தாத்தா, தந்தை ஆகியோர் பட்ட துன்பத்தையும் அறிந்து அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட உரிமையையும், நாட்டையும், நிலத்தையும் பெறவேண்டும் மற்றும் மக்களின் அடிமைத்தனத்தை ஒழித்து, துன்பத்தை போக்கி சுதந்திரமடையச் செய்யவேண்டும் என்று போராடி வெற்றிப் பெற்று இறுதியில் பொன்னர், சங்கர் இருவரும் வீரமரணம் அடைவதே இப்புதினத்தின் கதையாகும்.

**பொன்னரின் பண்பு நலன்கள்:**

பொன்னர், சங்கர் புதினத்தில் பொன்னரின் பண்புகள் பல இடங்களில் வெளிப்படுவதைக் காணலாம்.‘வல்லமையும், வணங்கத்தக்க நற்பண்பும், வைராக்கிய நெஞ்சமும் கொண்டவர்கள் பொன்னர் சங்கர்’[1].

**‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்’ [2].**

என்ற குறளுக்கு ஒப்பாக பொன்னர், சங்கர் மதிக்கப்படுகிறார்கள்.

‘ஓர் நாள் மாயனூர் மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயில் திருவிழா. அதே நாள் பொன்னர், சங்கர் கல்வி கற்கும் பாசறைக்கும் விடுமுறை.ஆற்றங்கரைக்கு ஒருபக்கம் கோயில். மறுப்பக்கம் பாசறை.கோயில் திருவிழா நடப்பதை அறிந்த பொன்னர், சங்கர் ஓடக்காரன் ஒருவனிடம் கோயில் திருவிழா பற்றியும், கோயில் வரலாறு பற்றியும் அறிய ஆர்வம்கொண்டுவிசாரித்தனர். ஓடத்தில் ஏறுங்கள் கதையை சொல்லிக்கொண்டே செல்லலாம் என்றான் ஓடக்காரன்.சங்கருக்கு மிகுந்த ஆர்வம் கொண்டு ஓடையில் ஏற முற்படுகிறார்.பொன்னர், சங்கரைத் தடுத்து ‘ஆசானுக்கு அறிவிக்காமல் அவ்வளவு தொலைவு செல்லக் கூடாது வேண்டாம் தம்பி செல்லாண்டியம்மன் கோயிலைப் பற்றி நமது ஆசானிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் அவரிடம் ஒப்புதல் பெறாமல் அடுத்தவூர் செல்வது முறையல்ல’ என்று தடுத்துவிடுகிறார்[3]. இதன் மூலம் ஆசானின் மீதுள்ள மரியாதையும், ஆசானுக்கு அஞ்சுதல், ஆசான் இல்லாதபோதும் அவர் மீது கொண்டுள்ள உண்மைத் தன்மையும் வெளிப்படுகிறது.

பொன்னர், சங்கர் இருவரின் தாயான தாமரைநாச்சியின் அண்ணன் சின்னமலைக்கொழுந்து.சின்னமலைக்கொழுந்தின் மனைவி சிலம்பாயி, மகள்கள் முத்தாயி, பவளாயி, மகன் வையபெருமான் ஆகியோர் செல்லாண்டியம்மன் கோயில் திருவிழாவிற்கு சென்று பின் மணியங்குறிச்சிக்கு திரும்பும் போது பாதிவழியில் தலையூர்காளி மன்னனின் தளகர்த்தாக்களில் ஒருவனான திருமலை என்பவன் அவர்களை சிறைபிடிக்கிறான். அதை அறிந்த சின்னமலைக்கொழுந்து போர் தொடுத்து அவர்களை மீட்க வீரர்களுக்கு ஆணையிடுகின்றான். பொன்னரும் சங்கரும் சின்னமலைக்கொழுந்திற்கு துணைநின்று அவர்களை நாங்கள் மீட்டுவருவதாக கூறி வீரர்களுக்கு தலைமையேற்று செல்கின்றனர். ஆரிச்சம்பட்டியிலிருந்து சின்னமலைக்கொழுந்தின் குடும்பத்தினரை சிறைபிடித்து வைத்துள்ள ராச்சாண்டார் மலைக்கு அருகில் பொன்னர், சங்கர் படை வருவதை அறிந்த திருமலையின் படை வீரர்கள் எண்ணிலடங்காத அம்புகளை அவர்கள் மீது எய்துகின்றனர்[4]. பொன்னர் ஆரிச்சம்பட்டி வீரர்களை நோக்கி ‘கேடயங்களை கொண்டு அம்புகளை தடுத்திடுங்கள், எதிரிகளிடமுள்ள அம்புகள் பெருமளவு தீர்ந்த பிறகு நமது எதிர்ப்பு தொடங்க வேண்டும். அதுவரை எதிர்ப்பை தடுக்கவும், தாங்கிக்கொள்ளவும் நம்முடைய வலிமையை பயன்படுத்த வேண்டும். எதிரியின் பலத்தை குறைத்து அவர்கள் மீது மோதுதல் வேண்டும்’ என்று யோசனை கூறினார். அதன்படியே வீரர்கள் செயல்பட்டு சின்னமலைக்கொழுந்துவின் குடும்பத்தினரை மீட்டு வெற்றிபெற்றுவிடுவார்கள்[5]. இதன் மூலம் பொன்னரின் சாதுர்யமும், புத்திசாலித்தனமும் வெளிப்படுவதை அறியலாம்.

‘சின்னமலைக்கொழுந்துவின் குடும்பத்தை மீட்டதையும், வெற்றிப்பெற்றதையும் தாங்கிக் கொள்ள முடியாமல் தலையூர்காளிமன்னன் வளநாட்டின் பெரும்படையை

சின்னமலைக்கொழுந்து ஆட்சி செய்துவரும் ஆரிச்சம்பட்டியின் மீது போர் தொடுக்க அனுப்புகிறான். வளநாட்டின் படையினை எதிற்கும் அளவிற்கு ஆரிச்சம்பட்டி வீரர்களின் எண்ணிக்கை குறைவு என்பதால் மாயவர் என்பவர் உறையூர் சோழ அரசரிடம் படை உதவி கேட்டு வீரர்களை அழைத்துக்கொண்டு ஆரிச்சம்பட்டி வந்து, பொன்னர், சங்கரிடம் ‘நமக்கு உதவிபுரிய அழைத்துவந்துள்ளேன்’ என மாயவர் கூறினார். மாயவர் என்பவர் தலையூர்காளி மன்னனிடம் முன்னாள்அமைச்சராக இருந்தவர். தலையூர்காளியின் முறையற்ற ஆட்சி பிடிக்காததாலும், மாயவரின் பேச்சுக்கு மதிப்பு கொடுக்காததாலும் அமைச்சர் பதவியை துறந்து தலையூரைவிட்டு சென்று பல ஊர் பல நாடு சுற்றித்திரிந்து பின் பொன்னர், சங்கருக்கும் அவர்களுடைய குடுப்பத்தினருக்கும் உதவியாக இருப்பவர். அவர் அழைத்துவந்த சோழர்படையை உடனே ஏற்றுக்கொள்ளாமல் எண்ணற்ற போர் அழிவிலும், எதிர்படையை தாக்குப்பிடிப்பது எளிதல்ல பெரும்படை நம்மைசூழ்ந்துள்ளது என்ற சூழ்நிலையை அறிந்திருந்தபோதும், பொன்னர் நிதானமாக பொறுமையாக மாயவரிடம் ‘நாங்கள் சோழர்படையை ஏற்று வெற்றிபெற்று வளநாடு எங்கள் ஆட்சிக்கு வந்தபின்பு சோழர் படையை வைத்துதான் வெற்றிபெற்றோம் என்று சோழ மன்னனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும், அவருக்கு கப்பம் கட்டுபவராகவும், ஆட்சி முறைக்கு அவர்களிடம் அனுமதி பெறுதல் வேண்டும் என்றும் இதுபோன்ற நிபந்தனையுடன் சோழர் படை உதவி செய்ய வந்திருந்தால் அப்படை எங்களுக்கு தேவையில்லை திருப்பி அனுப்பிவிடுங்கள். இப்படிப்பட்ட நிபந்தனைகளுடன் அப்படை உதவியை பெறுவதற்குப்பதிலாக நாங்கள் போரில் வீழ்வதே மேல். வெற்றிபெற்றால் தனியாட்சி எங்கள் தலைமையில் நடைபெறவேண்டும், எந்தநாட்டிற்கும் தலைவணங்காத ஆட்சியாக இருத்தல் வேண்டும்’ என்று உறுதியாக கூறினார்[6]. இதன் மூலம் பொன்னரின் நிதானம், பொறுமை, இக்கட்டான சூழ்நிலையிலும் தெளிவு, நன்மை எது தீமை எது என சிந்திக்கும் திறன், வீரம், அஞ்சாத்தன்மை, வீழ்ந்தாலும் யாருக்கும் அடிமையாக கூடாது என்ற உறுதி ஆகிய பண்புகள் வெளிப்படுதை அறியலாம். இதுபோன்று பல்வேறு சூழ்நிலைகளில் பொன்னரின் பண்புகள் பொன்னர் - சங்கர் புதினத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

மேலும் பொன்னர் ஆசானுக்கு மதிப்பளிப்பவர், தனக்கு துன்பம் வரும்போதும், பிறர் இகழ்ந்து பேசும் போதும், பல பிரச்சனைகள் ஏற்படும்போதும் பொறுமையாக இருப்பவர். கடும் துன்பம் கொடுக்கும் எதிரிகளையும் மன்னிக்கும் பெருந்தன்மையான குணம் கொண்டவர்.புத்திசாலித்தனமும் சாதுர்யமும் கொண்டவர். சிந்தனைத்திறன்மிக்கவர்.வீரமானவர்.அனைவரிடமும் மரியாதையுடன் நடந்து கொள்பவர் ஆகிய குணங்களோடு பொன்னர் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

பொன்னரின் பண்புகளை வெளிப்படுத்தும் பாடல்கள் இன்றளவும் மக்களிடையே புழக்கத்தில் உள்ளது.

**‘பொருமை பூமி ஆழ**

**வீரம் பூமினோருக்கு போராட**

**சாதுர்யம் சரித்திரத்தில் இடம் பெற**

**மதிப்பு அழியா மாண்டோருக்கு’[7]**

‘நமக்குப் பிறர் துன்பத்தைக் கொடுக்கும் போதும்பிறர் இழிவாகப் பேசும்போதும்தானாக வந்து பிறர் பிரச்சனை செய்யும் போதும் வேறு எந்த இடையூறுகள் நம் வாழ்வில் வந்தாலும் பொறுமையாக இருந்து நல்லது, தீயது அறிந்து முறையாக செயல்பட்டு சரிசெய்ய வேண்டும். ‘நாட்டினை ஆளுகின்றஅரசனுக்கு மிகமுக்கிய குணம்’ என்று கூறிகின்றனர்[8]. போர்க்களத்தில் போரிடுவது மட்டும் ஒரு அரசனின் வீரம் அல்ல. எதிரியோடு போரிடுவதற்குமுன் மக்களுக்கு ஏற்படும் அழிவைப்பற்றியும், அவர்களுடைய பாதுகாப்பினைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.நாட்டு மக்களின் வறுமையை நீக்கியும், துன்பத்தைப் போக்கியும் , அவர்களுடைய தேவையை அறிந்து அதை செய்து கொடுத்தும், மக்களின் பாதுகாப்பிற்கும், மகிழ்ச்சிக்கும், நலனுக்கும்ஏற்ப சிந்தித்து ஆட்சி செய்பவனே வீரமுடைய சிறந்த அரசன்.ஒரு அரசனுடைய ஆட்சியானது புத்திசாலித்தனமும், திறமையும், ஆற்றலும் நிறைந்திருக்க வேண்டும். சாதுர்யமாக ஆட்சிசெய்பவனே பெரும் புகழினையும், சிறப்பினையும் அடைந்து வரலாற்றில் இடம் பெற்று மக்களால் என்றும் போற்றத்தக்கவனாக அமைவான்’[9]. மேற்கூறப்பட்ட மூன்று கருத்துக்களும் மன்னரின் மதிப்பிற்கு காரணமாக கருதப்படுகிறது. இக்குணங்களை உடைய அரசன் இறந்து மடிந்தாலும் அவனுடைய புகழானது இன்றும் அழியாமல் பேசப்படுகிறது. இக்குணங்கள் அனைத்தும் ஒர் அரசனுக்கு மட்டுமின்றி, சாதாரணமாக அனைவரது வாழ்விலும் பொதுவானவை என்ற கருத்து பொன்னரின் குணத்தின் மூலம் வெளிப்படுகிறது.இத்தகைய மதிப்புகளோடு போற்றத்தக்க பொன்னர் இன்றளவும்வணங்கப்படும் தெய்வமாக உள்ளார்.

**சங்கரின் பண்பு நலன்கள்**

பொன்னர் - சங்கர் புதினத்தில் சங்கரின் பண்புகள் பல இடங்களில் வெளிப்படுவதை காணலாம்.‘செல்லாண்டியம்மன் கோயில் திருவிழாவில் கரகம் விடும் திருவிழா நடைபெறும் அதில் பெரியகாண்டியம்மனாகவும் செல்லாண்டியம்மனாகவும் சின்னமலைக்கொழுந்துவின் மகள்கள் அலங்காரம் செய்து கொண்டு கரகத்தை தூக்கிக்கொண்டு ஓடத்தில் அமர்ந்து ஆற்றினுள் சென்றனர். எதிர்பாராமல் ஆற்றின் பாதிக்கு சென்ற பின்பு ஆற்றில் பெரும் வெள்ளம் வந்துவிட்டது. முத்தாயி, பவளாயி இருவரும் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு தவிப்பதைக்கண்ட பொன்னரும், சங்கரும் அவர்கள் இருவரையும் காப்பாற்ற ஆற்றில் குதித்து நீந்தி அவர்கள் சென்ற ஓடத்தில் முத்தாயி ஓடத்தை பொன்னரும் பவளாயி ஓடத்தை சங்கரும் பற்றிக்கொண்டு

பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தோடு போராடி கரை சேர முற்படுகின்றனர். பவளாயின் ஓடத்தை தள்ளியவாரு நீந்திவந்த சங்கரின் கால்களை முதலை ஒன்று பற்றி கொண்டதில் இரத்தம் பீரிட்டது. கடுமையான வெள்ளத்திலும்,காற்றிலும், மழையிலும், முதலையின் கடியையும் பொருட்படுத்தாமல் ஓடத்தினை விடாமல் பற்றிக்கொண்டு முதலையோடு போராடி பவளாயியை கரைசேர்த்துவிட்டார்’[10]. இதன் மூலம் சங்கரின் துணிச்சல், வீரம், வலிமை, அச்சமின்மை போன்ற பண்புகள்வெளிப்படுவதைகாணமுடிகிறது.

‘சின்னமலைக்கொழுந்தின் குடும்பத்தினரை திருமலையிடம் இருந்து மீட்டுவந்துவிட்டால் முத்தாயி, பவளாயி இருவரையும் பொன்னர், சங்கருக்கே திருமணம் செய்துவைப்பதாக வாக்குறுதி செய்து போருக்கு இருவரையும் அனுப்பி வைத்தார்’[11]. அதேபோல் இருவரும் வெற்றிப்பெற்று சின்னமலைக்கொழுந்தின் குடும்பத்தினரை மீட்டுவிடுவார்கள்.‘சின்னமலைக்கொழுந்தும் திருமணம் செய்துவைக்க தாயாராகி பொன்னர், சங்கரிடம் உங்கள் கருத்தை கூறுங்கள் என்று கேட்கும்போது ‘எல்லாம் எங்கள் ஆசான் விருப்பப்படியே நடக்க வேண்டும்’ என்று கூறிவிடுவார்கள். ‘சரி உங்கள் ஆசானுக்கு ஓலையனுப்பி இங்கு வரவழைத்து ஒப்புதல் கேட்கலாம்’ என்று கூறிய யோசனையை பொன்னர், சங்கர் மறுத்து ‘ஆசானால் வளர்க்கப்பட்ட நாங்கள் இங்கே இருந்துகொண்டு எங்களை பார்க்க அவரை இங்கு அழைப்பது முறையல்ல. எங்களுக்கு தாயாக, தந்தையாக, ஆசானாக விளங்கியவரை நாங்கள் சென்று பார்ப்பதே அவருக்கு நாங்கள் கொடுக்கும் மரியாதை என்று கூறினார்கள்’[12]. ஆசானிடமும் சென்று நடந்தவற்றையெல்லாம் விளக்கி ‘திருமணத்திற்கு தாங்கள் ஒப்புதலே எங்களுக்கு முக்கியம் தாங்கள் என்ன கூறினாலும் அதனை ஏற்க நாங்கள் தயார். என்று கூறி வணங்கி நின்றார்கள்.அதற்கு ஆசான் ‘நீங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வதில் எனக்கு சம்மதம்தான், சந்தோசம்தான். ஆனால் நான் உங்களை வளர்ப்பதற்காகவும், காப்பாற்றுவதற்காகவும் நான் பெற்ற இரு குழந்தைகளையும் தலையூர்காளி மன்னனுக்கு பலிக்கொடுத்துள்ளேன். என் குழந்தைகளை பிரிந்த உடனே என் மனைவியும் இறந்துவிட்டாள். அவள் புதைக்கப்பட்ட இடத்திற்கு உங்கள் இருவரையும் தூக்கிச் சென்று அன்று நான் ஒரு சபதம் எடுத்துக்கொண்டேன். எங்கள் குழந்தைகளை கொல்வதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களைஉங்கள் இருவரையும் கொண்டு பழிவாங்குவேன். என்னுடைய குழந்தைகளாக வளர்ப்பேன், வீரர்களாக வளர்ப்பேன்என்று சத்தியம் செய்தேன். என் சபதம் நிறைவேறும் வரை இருவரும் பிரம்மச்சாரிகளாகவே இருக்கவேண்டும் என்றார்’[13].பொன்னரும் சங்கரும் ஆசானின் சபதம் கேட்டு ஆசானை வணங்கி ‘உங்களுடைய சபதம் இனி எங்களுடையது அதை நாங்கள் கட்டாயம் நிறைவேற்றுவோம் அதுவரை நாங்கள் திருமணம் ஆகாமல் பிரம்மச்சாரிகளாகவே இருக்கிறோம்’ என்று ஆசானுக்கு இருவரும் வாக்கு கொடுத்தார்கள்.ஆசானின் சபதத்தை

நிறைவேற்றுவது என்பது மாணவர்களின் கடமை அதுவே ஆசானுக்கு கொடுக்கும் மரியாதை என்று கூறினர்.அதன்பிறகு சின்னமலைக்கொழுந்து குடும்பத்தினர் இருக்குமிடத்திற்கு ஆசான் ராக்கியண்ணன், மாயவர்,பொன்னர், சங்கர் ஆகியோர் சென்று ஆசானின் சபதத்தைப் பற்றி கூறினார்கள். பொன்னர், சங்கர் இருவரும் 'முத்தாயி, பவளாயி இருவருக்கும் வேறு ஆண்களுக்கு திருமணம் செய்து வையுங்கள்' என்று கூற அவர்கள் பதிலைக்கேட்டுஉடனடியாக முத்தாயி, பவளாயி இருவரும்'திருமணம் செய்து கொண்டு ஆசானின் சபதத்தை நிறைவேற்றுங்கள். சபதம் முடியும் வரை கணவன் மனைவியாக இணைந்து இல்லற வாழ்வு நடத்தாமல் பிரம்மச்சாரிகளாக இருக்கட்டும்' என்று கூறினார்கள்'[14]. அதன்படியே திருமணம் செய்து கொண்டு பிரம்மச்சாரிகளாகவே இருந்து ஆசானின் சபதத்தை நிறைவேற்ற போராடினார்கள். இதன் மூலம் சங்கர் ஆசானின் மீது கொண்டுள்ள மரியாதை, உண்மையான நன்றி, விசுவாசம் ஆகிய பண்புகள் வெளிப்படுவதை அறியமுடிகிறது.

மேலும்சங்கர் முன்கோபக்காரர், துணிச்சலானவர், துன்பத்தை தமக்கு ஏற்படுத்தினோருடன் உடனடியாக சண்டையிட்டு பதிலுக்கு பதில் கொடுத்துவிட வேண்டும் என்று ஆவேச குணம் உடையவர். விவேகமானவர்.வலிமையும்வீரமும் கொண்டவர்.எதிரியால் தன்னுடைய உடலில் முன்புறத்தில் காயம் பட்டாலும் அவமானம் என்று எண்ணுபவர். ஆசானின் வார்த்தைக்கு சிறிதளவும் மாற்றமின்றி கட்டுப்பட்டு வணங்கி நடந்து கொள்பவர் என்று சங்கரின் பண்புகள்புதினத்தில் வெளிப்படுகின்றன.

சங்கர் ஆசானுக்கு கட்டுப்படும் பண்புகள் கூடிய பாடல்கள் இன்றளவும் மக்களிடையே புலக்கத்தில் உள்ளது

**'ஆசானுக்கு அஞ்சினோன் அமருவான்**
**ஆசானை வணங்கினோன் வாழ்வான்**
**ஆசானுக்கு கட்டுப்பட்டோன் அடைவான் – அவனே**
**எத்திசையும் போற்றத்தக்க அறிவுடையவனாவான்'[15]**

'ஆசானுக்கு பயந்து கல்வி கற்பவன் அனைவரும் மதிக்கும் அளவிற்கு உயர்ந்த இடத்தில் அமருவான். ஆசானை நாள்தோறும் வணங்கி கல்வி கற்பவன் வாழ்வில் சிறப்பினையும்,புகழினையும் குற்றமற்ற இன்பத்தையும் பெற்று வாழ்வான். ஆசானின் சொல்லுக்கு மறுப்பு இன்றி கட்டுப்பட்டு கல்வி கற்பவன் தன் மனதில் எண்ணிய இலட்சியத்தை அடைவான். இம்மூன்று அடக்கங்களையும் ஆசானிடம் கடைபிடிப்பவன் எவனோ அவனே எத்திசையினரும் போற்றத்தக்க அறிவினையும், பண்பினையும் பெற்றவன் ஆவான்'[16].

சங்கர் தன் ஆசானான ராக்கியண்ணன் அவர்களுக்கு அஞ்சி, வணங்கி, கட்டுப்பட்டு முழுமையான அறிவினையும், வலிமையையும், வீரத்தையும் பெற்று இன்றும் அனைவரும்

போற்றத்தக்கவராகவும், தெய்வமாகவும் வணங்கப்பட்டு வருகிறார்.எனவே கல்வி கற்போர் மேற்கூறப்பட்ட அடக்கங்களை ஆசானிடம் கடைபிடித்து வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்ற கருத்தினை சங்கரின் குணமானது வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

கலைஞர். மு. கருணாநிதி அவர்களின் பொன்னர்- சங்கர் புதினத்தில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களின் பண்புகள் வாழ்வியல் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. அக்கருத்துக்கள் அனைத்தும் அனைவரது வாழ்விற்கும் பொதுவானவை. பொன்னரின் பாத்திரப் படைப்பின் வாயிலாக இன்பம், துன்பம் என எந்த சூழ்நிலையிலும் பொறுமையாக இருத்தல் வேண்டும். நல்லது, கெட்டது அறிந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தினை உணரமுடிகிறது. சங்கரின் பாத்திரப் படைப்பின் வாயிலாக ஆசானுக்கு அஞ்சி, அவரை வணங்கி, அவர் சொல்லுக்கு கட்டுப்பட்டு அறிவினைப் பெறுபவனே வாழ்வில் போற்றத்தக்க சிறப்பினை அடைவான் என்ற கருத்தினை அறியமுடிகிறது. இவர்களுடைய பண்பின் மூலம் அறியப்பட்ட கருத்துக்களை யாவரும் கடைப்படித்தால் சிறந்த வாழ்வினை வாழமுடியும் என்பதனை அறிந்துகொள்ளமுடிகிறது.

**அடிக்குறிப்பு;**

1. பொன்னர்- சங்கர் நாவல் – ப – xii
2. மேலது – ப–xiii
3. மேலது – பக் – 66 முதல் 67
4. மேலது– பக் -119 முதல் 127
5. மேலது - பக்– 130 முதல் 145
6. மேலது - பக்– 217 முதல் 251
7. வீரப்பூர் என்ற ஊரில் மலையாண்டி என்பவரிடம் 5.5.2023 அன்று மதியம் 1.20 மணியளவில் உரையாடும் போது கிடைக்கப்பெற்ற தகவல்.
8. மேலது
9. மேலது
10. மேலது- பக்– 72 முதல் 79
11. மேலது - ப– 138
12. மேலது - பக்– 206 முதல் 209
13. மேலது-பக்– 209 முதல் 216
14. மேலது - பக்– 228 முதல் 233

15. ஆர். எஸ்.வையம்பட்டி என்ற ஊரில் தங்கவேல் என்பவரிடம் 8.5.2023 அன்று காலை10 மணியளவில் உரையாடும் போது கிடைக்கப்பெற்ற தகவல்.
16. மேலது

**பயன்பட்ட நூல் ;**


1. **கலைஞர். மூ. கருணாநிதி அவர்களின் பொன்னர் – சங்கர் நூல்.**